[2023 ஏப்ரல் 17

திருநங்கைகளுக்கான சமூகச் சட்டம்

2.1.7 திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019

திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டமானது 2019 ஆம் ஆண்டு இந்திய அரசால் நிறைவேற்றப்பட்டது மற்றும் தமிழ்நாடு திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) விதிகள் டிசம்பர் 2022-ல் ஏற்படுத்தப்பட்டது.

சட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- திருநங்கைகளின் அடையாளத்தை அங்கீகரிக்கவும், கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதார பராமரிப்பு, சொத்து வைத்திருத்தல் மற்றும் விற்றல், பொது அல்லது தனியார் அலுவலகம் நடத்துதல், பொதுச் சேவைகள் மற்றும் சலுகைகளை அணுகி பெறுதல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றில் பாகுபாடு காட்டுவதைத் தடை செய்ய இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது.
- "மாற்று பாலினம் கொண்ட நபர்" மற்றும் 'திருநங்கைகள்' என்ற வரையறைகள் திருநங்கைகள் மற்றும் திருநம்பிகளை உள்ளடக்கியதாக உள்ளன. (அப்படிப்பட்ட நபர் பாலின மாற்று அறுவை சிகிச்சை, ஹார்மோன் அல்லது பிற சிகிச்சையை மேற்கொண்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் பொருந்தும்).
- இந்த சட்டமானது, சுயமாக உணரப்பட்ட பாலின அடையாளத்திற்கான உரிமையை வழங்குவதுடன், எந்த மருத்துவ அல்லது உடல் பரிசோதனையின் தேவையும் இல்லாமல், ஒரு திருநங்கை என 'அடையாளச் சான்றிதழை' மாவட்ட ஆட்சியர் வழங்குவதற்கு வழிவகை செய்கிறது.

2.2. திட்டங்கள்

2.2.1 மகளிர் நலன்

2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 49.91% பெண்கள் உள்ளனர். பெண்கள் நலன் மற்றும் அதிகாரமளித்தல், மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார அதிகாரமளிக்கும்